தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

*******

ஆணை எண் 218/ந/2023
நாள் 13.09.2023

திருமதி. T. மார்க்ரெட் விஜயலதா
தென்காசி,
தென்காசி மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
தென்காசி நகராட்சி,
தென்காசி மாவட்டம். – எதிர் மனுதாரர்

தென்காசி மாவட்டம், தென்காசி, மலையான் தெரு, வார்டு எண்.6, கதவு எண்.859 என்ற முகவரியில் வசிக்கும் திருமதி. T. மார்க்ரெட் விஜயலதா என்பவரின் 28.07.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 31.07.2023 அன்று பெறப்பட்டு 218/ந/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனு மீது தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

ஆணை

தென்காசி மாவட்டம், தென்காசி, மலையான் தெரு, வார்டு எண்.6, கதவு எண்.859 என்ற முகவரியில் வசிக்கும் திருமதி. T. மார்க்ரெட் விஜயலதா என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

"தென்காசி நகராட்சிக்குட்பட்ட மலையான் தெரு, வார்டு எண்.6, பழைய கதவு எண்.81A/44, புதிய கதவு எண்.849 என்ற வீடு எனக்கு சொந்தமானது. மேற்படி வீடு அமைந்துள்ள மனையானது அரசு புறம்போக்கு இடம் என்பதால் மனைக்குரிய கிரைய தொகையை செலுத்தும்படி தென்காசி வட்டாட்சியர் அவர்கள் உத்தரவிட்டதற்கிணங்க நான் அந்த இடத்திற்கு கடந்த 03.10.2007 அன்று தென்காசி 'ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா வங்கி'' மூலம் 0029 Land Revenue 0029–00101.AH 0409–ன்படி மனை கிரைய தொகையாக அரசாங்கத்திற்கு ரூ.29,040/– செலுத்தி கடந்த 08.10.2007 அன்று தென்காசி வட்டாட்சியர் அவர்களால் அந்த மனை எனக்கு உத்தரவு எண்.ஆ3/11319/2007–ன்படி ஒப்படைப்பு செய்யப்பட்டது.

இந்நிலையில் மேற்படி தபசில் மனையில் கட்டப்பட்டுள்ள மேற்சொன்ன வீட்டிற்கு தென்காசி நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணை பெமா.மனு. எண். 473/2007/அ1, நாள் 23.11.2007–ன்படி கடந்த 2007 முதல் நாளது வரை நான்

தென்காசி நகராட்சியில் பழைய வரிவிதிப்பு எண்.145/4624–ன்படியும், வார்டு வரையறைக்கு முன் 145/008/00206 படியும், வார்டு வரையறைக்குப் பின் 145/006/900846 படியும் நான் வீட்டுத் தீர்வை செலுத்தி வருகிறேன்.

இந்நிலையில் எதிர்மனுதாரர்கள் ஒன்று சேர்ந்து கூட்டு சதி ஆலோசனை செய்து தற்போது தென்காசி மாவட்டம் குடியிருப்பு கிராமம், கதவு எண்.25 C, ராயர் தோப்பு என்ற முகவரியில் வசித்துவரும் திரு. ஜான்சன் சோமசுந்தரம் மாணிக்கராஜ் என்பவருக்கு சட்டத்திற்கு புறம்பாக, அவருக்கு ஆதாயம் ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கோடு எனக்கு எவ்வித முன் அறிவிப்பும் கொடுக்காமல், என் தரப்பு நியாயத்தை கேட்காமல் எனக்கு பாத்தியப்பட்ட மேற்படி வீட்டிற்கு திரு. ஜான்சன் சோமசுந்தரம் மாணிக்கராஜ் என்பவருக்கு வார்டு வரையறைக்கு முன் Assessment No.145/008/00892 வார்டு மறு வரையறைக்குப் பின் Assessment No.145/006/901143–ன்படி கடந்த 10.08.2021 அன்று போலியாக, போர்ஜரியாக ஒரு மோசடி வரிவிதிப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் மேற்படி வரிவிதிப்பு ஏற்படுத்தப்பட்ட தபசில் இடம் (சர்வே எண்.639) 31.12.2006–க்கு முன்பாக எந்த வகைப்பாட்டில் இருந்தது என கடந்த 23.06.2009 அன்று தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்கீழ் தென்காசி நகராட்சி அலுவலகத்தில் தகவல் கேட்டதில், "மேற்படி இடம் சர்க்கார் புறம்போக்கு மலையான் தெரு என்ற வகைப்பாட்டில் இருந்தது" என்று தென்காசி நகராட்சி அலுவலகத்தில் இருந்து எனக்கு தகவல் கிடைக்கப் பெற்றது. எனவே, தென்காசி நகராட்சி அலுவலகத்தால் மேற்படி இடம் சர்க்கார் புறம்போக்கு என்று தகவல் வழங்கியுள்ள நிலையில், அந்த இடம் திரு. எம்.எஸ்.துரைராஜ் என்பவருக்கு சுயார்ஜிதமாய் பாத்தியப்பட்டது என்று மோசடியாக கூறப்பட்டுள்ள ஒரு உயில் ஆவணத்தை வைத்து திரு. ஜான்சன் சோமசுந்தரம் மாணிக்கராஜ் என்பவர் பெயரில் வரிவிதிப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதால் மேற்படி எதிர்மனுதாரர்கள் அனைவரும் தங்கள் அரசு அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து மேற்படி குற்றச் செயலில் ஈடுபட்டுள்ளார்கள் என தெரிய வருகிறது.

இந்நிலையில் இந்த விபரம் அறிந்த நான் இது சம்பந்தமாக தென்காசி நகராட்சி ஆணையாளர் அவர்களுக்கும் மற்றும் தென்காசி நகராட்சி மேலாளர் அவர்களுக்கும் கடந்த 05.01.2022 அன்று புகார் மனு கொடுத்துள்ளேன். ஆனால் அதன்பின்பும் என் மனு மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாததால் நான் கடந்த 20.01.2022 அன்று நகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு மீண்டும் ஒரு மனு அனுப்பினேன். ஆனால் அந்த மனு மீதும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

பின்பு இது சம்பந்தமாக நான் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்படி, எதன் அடிப்படையில் திரு. ஜான்சன் சோமசுந்தரம் மாணிக்கராஜ் என்பவரின் பெயரில் வரிவிதிப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது என தென்காசி நகராட்சி அலுவலகத்தில் தகவல் கேட்டு மனு அனுப்பினேன். அதற்கு 28.04.2022 அன்று தென்காசி நகராட்சி அலுவலகத்தில் இருந்து வழங்கப்பட்ட தகவலில் திரு. ஜான்சன் சோமசுந்தரம் மாணிக்கராஜ் சமர்ப்பித்த பதிவு செய்த உயில் ஆவணம் மற்றும் உச்சநீதிமன்ற தீர்ப்பு ஆணை நகல்கள் அடிப்படையில் வரிவிதிப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதாக பொய்யாக கூறியுள்ளனர். அப்படி எந்தவித உச்சநீதிமன்ற தீர்ப்பும் கிடையாது. அவ்வாறு எந்த உச்சநீதிமன்ற தீர்ப்பையும் மேற்படி திரு. ஜான்சன் சோமசுந்தரம் மாணிக்கராஜ் நகராட்சி அலுவலகத்தில் தாக்கல் செய்யவில்லை.

எனவே இது சம்பந்தமாக நான் தென்காசி நகராட்சி ஆணையாளரிடம் மேல்முறையீடு செய்தேன். அதற்கு 11.05.2022 அன்று எனக்கு மேல்முறையீட்டு அறிவிப்பு கடிதம் கிடைக்கப் பெற்றது. அதிலும் திரு. ஜான்சன் சோமசுந்தரம் மாணிக்கராஜ் சமர்ப்பித்த பதிவு செய்த உயில் ஆவணம் மற்றும் உச்சநீதிமன்ற தீர்ப்பு ஆணை நகல்கள் அடிப்படையில்

வரிவிதிப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதாக பொய்யாக கூறியுள்ளனர். அப்படி எந்தவித உச்சநீதிமன்ற தீர்ப்பும் கிடையாது. அவ்வாறு எந்த உச்சநீதிமன்ற தீர்ப்பையும் மேற்படி திரு. ஜான்சன்சோமசுந்தரம் மாணிக்கராஜ் நகராட்சி அலுவலகத்தில் தாக்கல் செய்யவில்லை.

மேற்படி திரு. ஜான்சன் சோமசுந்தரம் மாணிக்கராஜ் என்பவர் சமர்ப்பித்துள்ள உயிலில் அந்த இடம் அவரது தகப்பனாருக்கு சுயாதீனமாய் பாத்தியப்பட்டது என்று சொல்லப்பட்டுள்ளது. மேற்படி திரு.ஜான்சன் சோமசுந்தரம் மாணிக்கராஜ் என்பவரின் தகப்பனாரான உயில் எழுதிக்கொடுத்த திரு. எம்.எஸ்.துரைராஜ் என்பவருக்கு அந்த இடம் சுயார்ஜிதமாய் பாத்தியப்பட்டது கிடையாது. அந்த இடத்தை அவர் எந்த தனிநபரிடமோ அல்லது வருவாய் துறையினரிடமிருந்தோ சட்டப்படியாக பெற்றதாக அந்த உயிலில் காணப்படவில்லை. அதற்கு எவ்வித உரிமை ஆதார ஆவணமும் கிடையாது. எனவே தபசில் மனை திரு. எம்.எஸ்.துரைராஜ் என்பவருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்று உயிலில் சொல்லியிருப்பது பொய்யான மோசடியான சங்கதிகள் ஆகும். மேலும் இவ்வாறாக ஒரு நபர், நகராட்சி அலுவலகத்தில் ஒரு இடம் தனக்கு உயில் மூலம் பாத்தியப்பட்டது என்றும் அந்த இடத்திற்கு தன் பெயரில் தீர்வை போட வேண்டும் என்றும் விண்ணப்பிக்கும் நிலையில் அந்த உயில் உண்மையானதா, சட்டப்படி செல்லத்தக்க உயிலா அல்லது உயில் எழுதிக்கொடுத்தவருக்கு அந்த இடம் எப்படி வந்தது என்பது சம்பந்தமான முன்ஆவணங்களை அதாவது அந்த உயிலுக்கு தொடர்புடைய ஆவணங்களை பார்வையிட்டு அந்த உயில் சட்டப்படியாக செல்லத்தக்க உண்மையான உயில்தான் என கண்டறிந்தபின்பே மேற்படி உயிலின் அடிப்படையில் வரிவிதிப்பு பதிவேட்டில் பெயர் சேர்க்க வேண்டும். ஆனால் இவ்வாறு எந்தவித சட்ட நடைமுறையும் எதிர்மனுதாரர்களால் பின்பற்றப்படவில்லை.

மேலும், மேற்படி இடம் சர்க்கார் புறம்போக்கு மலையான் தெரு என்ற வகைப்பாட்டில் இருந்தது என்று நகராட்சி அலுவலகத்தால் சான்று வழங்கப்பட்டுள்ள நிலையில், அந்த இடம் மேற்படி உயிலில் கூறியுள்ளபடி திரு. ஜான்சன் சோமசுந்தரம் மாணிக்கராஜ் என்பவரின் தகப்பனார் திரு. எம்.எஸ்.துரைராஜ் என்பவருக்கு சுயாதீனமாய் பாத்தியப்பட்டது அல்ல என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போல நகராட்சி ஆவணங்களின் வாயிலாக தெரிய வருகிற நிலையில், எதிர்மனுதாரர்கள் அந்த மோசடி உயிலின் அடிப்படையில் திரு. ஜான்சன் சோமசுந்தரம் மாணிக்கராஜ் என்பவரின் பெயரை வரிவிதிப்பு பதிவேட்டில் சேர்த்திருப்பது நகராட்சி ஊழியர்களான எதிர்மனுதாரர்கள் அனைவரின் மெத்தனப்போக்கை மற்றும் அலட்சியப் போக்கை காட்டுகிறது.

மேற்படி திரு. ஜான்சன் சோமசுந்தரம் மாணிக்கராஜ் என்பவர் தாக்கல் செய்துள்ள உச்சநீதிமன்ற ஆணையின்படியும் வரிவிதிப்பு பதிவேட்டில் அவர் பெயர் சேர்க்கப்பட்டதாக தகவல் பெறும் உரிமை சட்டம் சம்பந்தமான பதில் அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது. மேற்படி பிரச்சனை சம்பந்தமாக உச்சநீதிமன்றத்தில் எந்த வழக்கும் நிலுவையில் இல்லை எனவும் மதுரை உயர்நீதிமன்ற கிளையில் மட்டுமே மேற்படி வாடகை வீட்டை காலி செய்வது சம்பந்தமாக RCOP வழக்குதான் நிலுவையில் இருந்து வருகிறதே தவிர உச்ச நீதிமன்றத்தில் எந்த வழக்கும் நிலுவையில் இல்லை.

எனவே மேற்படி போலி உயிலின் அடிப்படையிலும், உச்ச நீதிமன்ற ஆணை இருப்பதாக பொய்யாக கூறியதன் அடிப்படையிலும் மட்டுமே மேற்படி திரு. ஜான்சன் சோமசுந்தரம் மாணிக்கராஜ் பெயருக்கு வரிவிதிப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதால் அது ஒரு மோசடியாக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் ஆகும்.

மேலும், மேற்படி திரு. ஜான்சன் சோமசுந்தரம் மாணிக்கராஜ் பெயருக்கு ஏற்படுத்தப்பட்ட வரிவிதிப்பு பதிவேட்டு Property Tax working Sheet–ல் Total Area Square Feet என்ற கலத்தில் கட்டடத்தின் பரப்பளவை மிகமிக குறைத்து 200 சதுர அடி என்று மோசடியாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதேபோல் கட்டட வயது 5 வருடங்களுக்கு உட்பட்டது என மோசடியாக, பொய்யாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அது ஒரு பழைய கட்டடமாகும். எனவே ஸ்தல ஆய்வு செய்யாமலேயே நகராட்சி அதிகாரிகளால் திரு. ஜான்சன் சோமசுந்தரம் மாணிக்கராஜ் பெயருக்கு போலியாக, போர்ஜரியாக, மோசடியாக வரிவிதிப்பு ஏற்படுத்தப்பட்டு தீர்வை ரசீதும் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் எதிர்மனுதாரர்களின் மோசடி செயல் குறித்து என் கணவர் திரு. தாம்சன் சாமுவேல் தினகராஜ் கடந்த 05.09.2022 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் தனிப்புகார் பிரிவிற்கும், தென்காசி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கும், நகராட்சிகளின் மண்டல இயக்குநர் ஆகியோருக்கும் புகார் மனு அனுப்பியுள்ளார்.

மேலும் திரு. ஜான்சன் சோமசுந்தரம் மாணிக்கராஜ் என்பவர் நகராட்சியில் தாக்கல் செய்துள்ள உயிலின் உண்மைத் தன்மையை கண்டறியாமல், அந்த உயில் சட்டப்படி செல்லத்தக்கதா என கண்டறியாமல் இது சம்பந்தமாக அரசு வழக்கறிஞரிடம் சட்ட கருத்து பெறாமல் எதிர்மனுதாரர்கள் நான்குபேரும் சேர்ந்து எனக்குப் பாத்தியப்பட்ட வீட்டிற்கு வேறு ஒரு நபர் பெயரில் தீர்வை போட்டுள்ள எதிர்மனுதாரர்களின் கவனக்குறைவான செய்கையினால் எனக்கு மிகுந்த மன உழைச்சலும், மிகுந்த மன வேதனையும், மன அமைதியின்மையும் ஏற்பட்டுள்ளது. அரசு அதிகாரிகள் ஒரு செயலை சட்டப்படி செய்யவோ, சட்டப்படி மறுக்கவோ முடியுமே தவிர, தங்கள் சுய விருப்பம் போல் அதனை மறுக்க முடியாது என பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், இந்திய குடிமகளான எனக்கு தீராத மன உளைச்சலையும், நிம்மதியின்மையையும் அரசு அதிகாரிகளான எதிர்மனுதாரர்கள் தன் பொறுப்பற்ற நடவடிக்கைகளால், அலட்சியமான நடவடிக்கைகளால் ஏற்படுத்தியுள்ளதால் பாதிக்கப்பட்ட எனக்கு இழப்பீடு வழங்க கடமைப்பட்டவராவார்கள்.

எதிர்மனுதாரர்கள் நான்குபேரும் தங்கள் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து போலியான ஆவணங்களின் அடிப்படையில் மேற்சொன்ன திரு. ஜான்சன் சோமசுந்தரம் மாணிக்கராஜ் பெயரை போலியாக வரிவிதிப்பு பதிவேட்டில் சேர்த்துள்ளதோடு அதன் அடிப்படையில் திரு. ஜான்சன் சோமசுந்தரம் மாணிக்கராஜ் பெயருக்கு போலித் தீர்வை ரசீது வழங்கியுள்ளனர்.

நான் என் முறையீட்டை சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலமாக நிரூபிக்க தயாராக உள்ளேன்.

ஆகவே, மாண்புமிகு மன்றத்தார் அவர்கள் கிருபை செய்து இந்த முறையீட்டை கோப்பிற்கு எடுத்து எதிர்மனுதாரர்களுக்கு அழைப்பாணை அனுப்பி அவர்களை வரவழைத்து என் முறையீட்டை விசாரணை செய்து என் தரப்பு ஆவணங்களை பார்வையிட்டு பரிசீலனை செய்து நீதி வழங்க தாழ்மையுடன் வேண்டுகிறேன்'' என தெரிவித்துள்ளார்.

**(2)** மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 08.08.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் தென்காசி நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

தென்காசி நகராட்சி ஆணையாளர் தனது 22.08.2023 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

"திருமதி.T.மார்க்ரெட் விஜயலதா, தென்காசி அவர்களின் மனுவில், தென்காசி நகராட்சி வார்டு எண்.6, கதவு எண்.849/81A44, மலையான் தெருவில் உள்ள பழைய வரிவிதிப்பு எண்.145/4624–ஐ நீக்கம் செய்து அதே கதவு எண்ணில் போலியான ஆவணங்கள் மூலம் 145/006/901143 என்ற புதிய வரிவிதிப்பு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி வரிவிதிப்பானது, தென்காசி நகராட்சியில் 03.08.2021 அன்று திரு. D.ஜான்சன் சோமசுந்தரம் மாணிக்கராஜ் என்பவரால் தென்காசி சார்பதிவக உயில் ஆவணம் எண்.79/2005 மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை வழக்கு C.R.P. (NPD) (MD) No.2300 of 2011 and M.P (MD) No.1 of 2011 ஆகிய ஆவண நகலுடன் புதிய வரிவிதிப்பு செய்ய வேண்டி மனு அளித்ததின் பேரில் மேற்படி ஆவணங்களை ஆய்வு செய்ததில் கதவு எண்.81A/44, என்ற கட்டடத்தின் தென்பாதி மனையை திரு.துரைராஜ் என்பவர் தனது மூத்த குமாரர் திரு. ஜான்சன் சோமசுந்தரம் மாணிக்கராஜ் என்பவருக்கும், வடபாதி மனையை தனது இளைய குமாரர் திரு. தாம்சன் சாமுவேல் தினகராஜ் என்பவருக்கும் உயில் கொடுத்துள்ளதன் அடிப்படையிலும், சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை உத்தரவின் அடிப்படையிலும் 145/006/901143 என்ற புதிய வரிவிதிப்பு ஏற்படுத்தப்பட்டு வழங்கப்பட்டது.

மேற்கண்ட புதிய வரிவிதிப்பு ஏற்படுத்தப்பட்ட பின்பு திருமதி. T. மார்க்ரெட் விஜயலதா மற்றும் அவரது கணவர் திரு.D.தாம்சன் சாமுவேல் தினகர்ராஜ் ஆகியோரால் வழங்கப்பட்ட தகவல் பெறும் உரிமைச்சட்ட மனுவில் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை உத்தரவு என்பதற்கு உச்சநீதிமன்ற ஆணை என தவறுதலாக வழங்கப்பட்டதை உயர்நீதிமன்ற ஆணை என திருத்தம் செய்து, மேற்படி புதிய வரிவிதிப்பு செய்தது சம்பந்தமான அனைத்து ஆவணங்களும், தென்காசி நகராட்சி அலுவலக 22.02.2022 முதல் 23.02.2023 முடிய 22 கடிதங்களின் வாயிலாக உரிய விபரங்கள் மனுதாருக்கு வழங்கப்பட்டுள்ளது.

மேலும் மேற்படி புதிய வரிவிதிப்பு செய்தது சம்பந்தமாக மேற்காணும் வழக்கினை மீண்டும் விசாரணைக்கு எடுக்க வேண்டி சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் W.P.(MD) 2023 மற்றும் 8024/2022 –ன்படி மீண்டும் வழக்கு தொடரப்பட்டு வழக்கு நிலுவையில் இருந்து வரும் நிலையில் மேற்படி வழக்கின் தீர்ப்பு பெறப்பட்டவுடன் அதன் அடிப்டையில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விபரமும் பணிவுடன் சமர்ப்பிக்கப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

**(3) மனுதாரரும் மற்றும் தென்காசி நகராட்சி ஆணையரும் 28.08.2023 அன்று தென்காசி முகாமில் நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 18.08.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

**(4) மனுதாரர் திருமதி.T.மார்க்ரெட் விஜயலதா 28.08.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.**

"தென்காசி மாவட்டம், தென்காசி நகராட்சிக்குட்பட்ட மலையான் தெரு, வார்டு எண் 6, பழைய கதவு எண் 81A/44, புதிய கதவு எண் 849 என்ற இடத்தில் அமைந்துள்ள எனது வீட்டிற்கு 2007 ஆம் ஆண்டு பெறப்பட்ட பட்டா உள்ளது. மேற்கண்ட வீட்டிற்கான சொத்து வரி எனது பெயரில் 2008 முதல் இருந்து வந்தது. அதற்கான சொத்து வரியை

2008 ஆம் ஆண்டுமுதல் 2022–23 ஆம் ஆண்டுவரை செலுத்தியிருந்தேன். இந்நிலையில், கடந்த 10.8.2021 அன்று திரு. ஜான்சன் என்பவர் போலியான ஆவணங்களை நகராட்சியில் அளித்து சொத்துவரி கேட்பு பெற்றுள்ளார். ஒரே வீட்டிற்கு எனது பெயரிலும், மேற்கண்ட திரு. ஜான்சன் என்பவரின் பெயரிலும் சொத்து வரி (இரண்டு) போடப்பட்டுள்ளது. மோசடியாக பெறப்பட்ட உயிலைக் கொண்டு சொத்து வரி விதிக்கப்பட்டதையடுத்து, இது தொடர்பாக சென்னை உயர்நீதி மன்ற மதுரைக் கிளையில் வழக்கு (CRP 2300/2011) தொடரப்பட்டு, அவ்வழக்கு தற்போது நிலுவையில் உள்ளது. மேற்கண்ட திரு. ஜான்சன் என்பவரின் பெயரில் சொத்துவரி போடப்பட்டதை எதிர்த்து என்னால் தொடரப்பட்ட வழக்கும் அதனைத் தொடர்ந்து நீதிமன்ற அவமதிப்பு வழக்கும் தற்போது நிலுவையில் உள்ளது என்கின்ற விவரத்தையும் மேலும் மேற்கண்ட எனது வீட்டிற்கான, எனது பெயரில் இருந்த வரி விதிப்பு கேட்பினை எனக்கு எவ்வித தகவலும் அளிக்காமல் ஏப்ரல் 2022ல் இரத்து செய்துவிட்டனர் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனவே மேற்கண்ட போலியான வரி விதிப்பிற்கு காரணமான அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுத்திடவும், போலியாக விதிக்கப்பட்ட சொத்து வரி கேட்பை ரத்து செய்திடவும் எனது பெயரில் இருந்த வரி கேட்பினை மீண்டும் எனது பெயரிலேயே வழங்கிடவும் ஆவண செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் எனது 28.7.2023 நாளிட்ட மனுவில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

(5) எதிர்மனுதாரரான தென்காசி நகராட்சி ஆணையாளர் சார்பாக தென்காசி நகராட்சியில் மேலாளராகப் பணியாற்றும் திரு.சி.சங்கர்கணேசன், உதவியாளராக பணியாற்றும் திரு.மா.நாகராசன் மற்றும் வருவாய் உதவியாளராகப் பணியாற்றும் திரு.க.செல்வகுமார் ஆகியோர் 28.08.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளனர்.

"திரு D.ஜான்சன் சோமசுந்தரம் மாணிக்கராஜ் என்பவர் தென்காசி சார் பதிவக உயில் ஆவணம் எண்.79/2005 மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை வழக்கு எண் C.R.P.(ND) (NPD) No.2300 of 2011 and M.P. (MD) No. 1 of 2011ன் மீதான வழக்கின் மீதான தீர்ப்பு (நகல் இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகிறது) ஆவண நகலுடன் புதிய வரி விதிப்பு செய்ய வேண்டி மனு அளித்ததின் பேரில் 145/006/901143 என்ற புதிய வரிவிதிப்பு வழங்கப்பட்டது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம். மேலும் இந்நேர்வு தொடர்பான, மனுதாரரால் தொடரப்பட்ட வழக்கு (வழக்கு எண் WP (MD) 8023 & 8024 of 2022) நிலுவையில் உள்ளது என்பதையும், வழக்கின் தீர்ப்பினையொட்டி இந்நேர்வு தொடர்பாக மேல்நடவடிக்கை எடுக்கப்படும் என்கின்ற விவரத்தையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் தென்காசி ஆணையாளர் (பொ) அவர்களின் 22.8.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எங்களது மேல்வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறோம்" என தெரிவித்துள்ளார்கள்.

(6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், தென்காசி நகராட்சி ஆணையரின் விளக்க அறிக்கை, தென்காசி நகராட்சி மேலாளர், உதவியாளர் மற்றும் வருவாய் உதவியாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

தென்காசி மாவட்டம், தென்காசியைச் சார்ந்த மனுதாரர் திருமதி. T. மார்க்ரெட் விஜயலதா என்பவர் தனது 28.07.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில் தென்காசி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.6, பழைய கதவு எண்.81A/44, புதிய கதவு எண்.849 கொண்ட மலையான் தெருவில் அமைந்துள்ள அரசு புறம்போக்கு நிலத்திற்கு வட்டாட்சியரின் ஆணைப்படி கிரையத் தொகை செலுத்தி வீடு கட்டியுள்ள நிலையில், அவ்வீட்டினை போலியான உயில் மூலமும் மற்றும் உச்சநீதிமன்ற ஆணை என பொய்யான தகவலின்படியும் திரு.ஜான்சன் சோமசுந்தரம் மாணிக்கராஜ் என்பவரின் பெயரில் தென்காசி நகராட்சியால் முறைகேடாக சொத்துவரி விதிக்கப்பட்டுள்ளது என புகார் தெரிவித்துள்ளார்.

**(7) இந்நேர்வு சம்பந்தமாக தொடர்புடைய ஆவணங்களை பரிசீலனை செய்தபோது கீழ்க்காணும் விவரங்கள் தெரிய வருகின்றது.**

தென்காசி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.8, கதவு எண்.81A/44/849 என்ற எண் கொண்ட வீட்டின் உரிமையாளர் திரு.M.S.துரைராஜ் என்பவரின் 05.11.2007 நாளிட்ட உறுதிமொழி விண்ணப்பத்தின் அடிப்படையில், மேற்படி கட்டடத்தின் சொத்துவரி திரு.M.S.துரைராஜ் என்பவர் பெயரிலிருந்து அவரது இளைய மருமகள் திருமதி. T. மார்க்ரெட் விஜயலதா பெயருக்கு 23.11.2007 அன்று தென்காசி நகராட்சியால் பெயர் மாற்றம் செய்து, சொத்துவரி விதிக்கப்பட்டுள்ளது.

மேற்காணும் வீடு திருமதி. T. மார்க்ரெட் விஜயலதா என்பவருடைய கணவரின் சகோதரர் திரு.ஜான்சன் சோமசுந்தரம் மாணிக்கராஜ் என்பவருக்கு வாடகைக்கு விடப்பட்டு அவ்வீட்டு வாடகைத் தொகை அளிக்கப்படாததாலும் சொத்தில் உரிமை கேட்கப்பட்டதாலும் வீட்டினை காலி செய்திட திருமதி. T. மார்க்ரெட் விஜயலதா என்பவர் தென்காசி வாடகை கட்டுப்பாட்டு நீதிமன்றத்தில் வழக்கு (வழக்கு எண்.RCOP 12/2008) தொடுத்து, அவ்வழக்கில் மனுதாரரான திருமதி. T. மார்க்ரெட் விஜயலதாவுக்கு சாதகமாக 29.06.2010 அன்று தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

மேற்காணும், தென்காசி வாடகைக் கட்டுப்பாட்டு நீதிமன்ற தீர்ப்பினை எதிர்த்து திரு.ஜான்சன் சோமசுந்தரம் மாணிக்கராஜ் என்பவர் தென்காசி வாடகைக் கட்டுப்பாட்டு மேல்முறையீட்டாளர் / முதன்மை சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீடு (Rent Control Appeal No.3/2010) செய்த வழக்கில், வழக்கு தொடர்பான பொருட்பாடானது, சொத்தினை உரிமைக் கோருவது சம்பந்தப்பட்டது என்பதால் இதற்கு உரிமையியல் நீதிமனறத்தில் தீர்வு காணலாம் என அறிவுறுத்தி, 29.06.2010 அன்று தென்காசி கட்டுப்பாட்டு நீதிமன்றத்தால் வழக்கு எண்.RCOP 12/2008–ல் வழங்கிய தீர்ப்பினை இரத்து (Set aside) செய்து 31.03.2011 அன்று தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

தென்காசி வாடகைக் கட்டுப்பாட்டு மேல்முறையீட்டாளர் / முதன்மை சார்பு நீதிமன்றத்தால் RCA எண்.3/2010–ல் 31.03.2011 அன்று வழங்கிய தீர்ப்பினை எதிர்த்து, மனுதாரர் திருமதி. T. மார்க்ரெட் விஜயலதா என்பவரால் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் தொடரப்பட்ட வழக்கில் Civil Revision Petition CRP (NPD) (MD)

No.2300 of 2011 and W.P (MD) No. 1 of 2011- ல் வழக்கு நடைபெற்ற நாட்களில் மனுதாரர் சார்பில் வழக்காட எவரும் ஆஜராகாததால், மேற்படி வழக்கு தள்ளுபடி (Dismissed) செய்யப்பட்டு 23.01.2020 அன்று தீர்ப்புரை வழங்கப்பட்டுள்ளது.

திரு.ஜான்சன் சோமசுந்தரம் மாணிக்கராஜ் என்பவர் சமர்ப்பித்த, தென்காசி சார் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்ட உயில் ஆவணம் எண்.79/2005 மற்றும் மாண்பமை மதுரைக்கிளை சென்னை உயர்நீதிமன்றத்தால் வழக்கு எண்.CRP (NPD) (MD) No.2300 of 2011 and MP (MD) No. 1 of 2011- ல் 23.01.2020 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையிலும் மற்றும் கதவு எண்.81A/44 என்ற கட்டடத்தின் தென்பாதி மனையை திரு.துரைராஜ் என்பவர் தனது மூத்த குமாரர் திரு.ஜான்சன் சோமசுந்தரம் மாணிக்கராஜ் என்பவருக்கும், வடபாதி மனையை தனது இளைய குமாரர் திரு.தாம்சன் சாமுவேல் தினகர்ராஜ் என்பவருக்கும் உயில் எழுதியுள்ளதன் அடிப்படையில் 145/006/901143 என்ற புதிய வரிவிதிப்பு ஏற்படுத்தப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட புதிய வரிவிதிப்பினை விதிக்கும் முன் மனுதாரரான திருமதி. T. மார்க்ரெட் விஜயலதா என்பவருக்கு எவ்வித அறிவிப்புமின்றி வரி விதிக்கப்பட்டுள்ளதை அறிய முடிகிறது.

மனுதாரர் திருமதி. T. மார்க்ரெட் விஜயலதா என்பவர் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தில் இந்நேர்வு குறித்து தகவல் கோரும் போது நகராட்சியின் பொது தகவல் அலுவலர் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையின் ஆணை என்பதற்கு பதிலாக உச்சநீதிமன்ற ஆணை என தவறுதலாக தெரிவித்து, அத்தவறினை மனுதாரருக்கும் தெரிவித்துள்ளதை ஆவணங்களின் மூலம் அறிய முடிகிறது.

மேலும், திருமதி. T. மார்க்ரெட் விஜயலதா என்பவரால் CMP (MD) No.2360 / 2022 in CRP (MD) No.2300 of 2011 சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் தாக்கல் செய்யப்பட்டு, உயர்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டு CRP (MD) No.2300 of 2011 புதிப்பிக்கப்பட்டுவிட்டது (Restored) என்பது ஆவணங்களின் மூலம் தெரிய வருகிறது. மேற்படி தென்காசி நகராட்சியால் புதிய வரிவிதிப்பு செய்யப்பட்டது தொடர்பாக திருமதி. T. மார்க்ரெட் விஜயலதா என்பவர் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில், திரு.ஜான்சன் சோமசுந்தரம் மாணிக்கராஜ் என்பவர் பெயரில் விதிக்கப்பட்ட Property Tax Assessment No.145/008/00892-ஐ இரத்து (Quash) செய்யக்கோரியும் தென்காசி நகராட்சியால் 07.01.2022 தேதியிட்ட (impuged Order) குறைகாண் ஆணையினை இரத்து (Quash) செய்யக்கோரியும் வழக்கு எண். WP (MD) No.8023 மற்றும் 8024/2022 என வழக்கு தாக்கல் செய்யப்பட்டு 13.06.2022 ஆம் தேதியிட்ட இடைக்கால (interm order) நீதிமன்ற ஆணையில் "Status quo already granted by this court is directed to be maintained till then." என ஆணையிடப்பட்டு, வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

மேற்படி நிலையில், மனுதாரர் திருமதி. T. மார்க்ரெட் விஜயலதா இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ள புகார் தொடர்பான பொருட்பாடு குறித்து, மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் வழக்கு தொடுத்து அவ்வழக்குகள் நிலுவையில் உள்ள நிலையில், நீதிமன்றங்களில் நிலுவையிலுள்ள பொருட்பாடு எதனையும், 2014 ஆம் ஆண்டு

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டப் பிரிவு 10 (3) (b)–ன்படி இம்முறைமன்ற நடுவம் விசாரணை செய்ய இயலாது என்பதால் இந்நேர்வு தொடர்பான நடவடிக்கையை இத்துடன் முடித்துக் கொள்ள இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

2023 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 13–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திருமதி.T.மார்க்ரெட் விஜயலதா,
கதவு எண்.859, வார்டு எண்.6, மலையான் தெரு,
தென்காசி மாவட்டம்.

2) ஆணையாளர், தென்காசி நகராட்சி,
தென்காசி மாவட்டம், தென்காசி – 627 811.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகர் நிர்வாக அலுவலக வளாகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகர் நிர்வாக அலுவலக வளாகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28. (பெயரிடப்பட்ட உரையில்)

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது//

செயலாளர்
13/09/23